ஜுலை 2010 மலர் 3 இதழ் 4

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

India ECHOES
ONE WORLD ONE HUMANITY

For Private Circulation Only

# 84ம் வயதில் மாஸ்டர்

மாஸ்டரைப் பற்றி ஒருவரால் திட்டவட்டமாக விவரிக்க இயலாது என்பதால், பின்வருபவையனைத்தும், தனிப்பட்ட கருத்துக்கள் ஆகும்.

84 வயதில், மாஸ்டரின் உடல்நிலை எப்போதும் போல் இல்லாமல் குன்றியுள்ளது. அவர் தன்னுடைய ஆற்றலை கவனமாகப் பாதுகாத்து, வேலைகளுக்கிடையே, ஓய்விற்காக நேரம் ஒதுக்கிக் கொள்கிறார். மேலும், அவருடைய நேரம் மற்றும் ஆற்றலை, முக்கியத்துவத்தின் அடிப்படையில் வேலை பளு இல்லாதவாறு பங்கீடு செய்து கொள்கிறார். நாளின் முடிவில், அனைத்து வேலைகளையும் முடித்துவிடுவதுடன், அன்றைய நாளிலேயே, தனக்கு வரும் மின்னஞ்சல்களுக்கு, அவை அலுவல் சார்ந்தவையோ, அல்லது அப்யாசியிடமிருந்து தன் துன்பம்பற்றி வந்தவையோ யா, எதுவாயினும், அவற்றிற்கு அவர் பதில் அனுப்பும் விதம், நம்மை வியக்க வைக்கிறது.

மாஸ்டர், மகிழ்ச்சியுடன் பல்வேறு விதமான சிகிச்சைகளை ஏற்றுக்கொள்வதோடு, மருந்து மாத்திரைகளையும் உட்கொள்கிறார். சில நேரங்களில், இவை அவரை கவனித்துக் கொள்பவரை மகிழ்விப்பதற்காகச் செய்வதுபோல தோன்றுகிறது. அவர், சூரிய ஒளியால் கண்கள் கூசுவதைத் தாங்க முடியாததால், பகல் நேரங்களில் கருப்புக்கண்ணாடி அணிந்து கொள்கிறார். சகோதரர் சத்பீர் அல்லது மாஸ்டரின் பேரன் பார்கவ், மின்னஞ்சல்களைப் படிப்பதற்கும், மற்றும் அவற்றிற்கு பதில் அனுப்பவதற்கும் உதவி புரிகின்றனர். அவருடைய கண்பார்வை குறைவடைந்த நிலையிலும், அவருடைய உள்ளுணர்வு ஆற்றல் முன்பு போலவே உச்சத்திலிருப்பதை உணர முடிகிறது. அருகில் இருக்கும் தனிப்பட்ட நபரை, பார்த்து அறிவதைவிட, உணர்வுகளாலேயே புரிந்து கொள்கிறார்.

மாஸ்டரின் உணவில், பல பதார்த்தங்கள் அவர் உண்ணத் தடை செய்யப்பட்டு உள்ளன. எனினும் , அவர் ஒரு சக்கரவர்த்தி போல், எப்போதும் சில அப்யாசிகள் சகிதமே உணவு மேஜையில் அமர்கிறார். அவர் மௌனமாக உணவருந்துகிறார் (ஒரு வேளை அங்குள்ளவர்கள் மேல் பணிபுரிந்து கொண்டிருக்கலாம்). மேலும் சில நேரங்களில் அங்கு உயிரோட்டமான கலந்துரையாடல், அர்த்தத்துடன் கூடிய சாதுர்யமான பேச்சுகள், மற்றும் யாராவது ஒருவரின் தூண்டுதலால் மாஸ்டரிடமிருந்து வரும் பதில்கள் ஆகியவை இருக்கும்.

மாஸ்டர், அவ்வப்போது மட்டுமே வெளியில் நடந்து வருகிறார். ஆனால் அவருடைய அறையில் walker உதவியுடன் உடற்பயிற்சி செய்கிறார். எப்பொழுதெல்லாம் மாஸ்டரின் உடலாற்றல் குறைந்ததுபோலுள்ளதோ, அச்சமயங்களில் டாக்டர் மோகனசெல்வன் அவர்கள், மாஸ்டரின் உடல் நிலை சிறிது முன்னேற உதவி புரிகிறார். அதுமட்டுமின்றி, மாஸ்டர் அவ்வப்போது சகஜ மார்க்க மருத்துவ மையத்தில், பல் மருத்துவரையும் சந்தித்து வருகிறார். இருப்பினும் அவர், உடல் நலக்குறைவு பற்றி அதிகம் பொருட்படுத்தாமல், மிகவும் சாதுர்யமாக அவற்றுடன் போராடி வருகிறார்.

அவர் தலைமையேற்றுள்ள மிஷனின் அபார வளர்ச்சியால், மாஸ்டரின் பணி மற்றும் பொறுப்புகள், பன்மடங்கு அதிகரித்துள்ளன. அவர் தனது Golf cart வாகனத்தில் சுற்றி வந்து தன்னைப் பார்க்க வேண்டும் என்று பேராவல் கொண்டவர்களைச் சந்தித்தும், வாழ்த்தியும் மற்றும் அவர்களுடன் கலந்துரையாடவும் செய்கிறார். மாஸ்டர், மணப்பாக்கம், திருப்பூர் மற்றும் கொல்கத்தா போன்ற மையங்களில் தாம் தங்கும்போது, இந்தியாவிலுள்ள பல்வேறு மையங்களிலிருந்தும் அப்யாசிகள் அங்கு வருவதை ஊக்கப்படுத்துகிறார். அவர் நமது ஆசிரமங்களில் அதிகப்படியான அப்யாசிகளுடன் தங்குவதில் மகிழ்ச்சியடைகிறார். மேலும் அவ்விடங்களில் சத்சங்கங்கள் நடத்துவதையும் விரும்புகிறார்.

மாஸ்டர் உருவாக்கிய ஓமேகா பள்ளி, சத்கோல் ஆசிரமம், CREST மையங்கள் மற்றும் புத்துணர்வு மையங்கள் ஆகியவையும், இந்தியாவெங்குமுள்ள ஆசிரமங்கள் மற்றும் மையங்களைப் போலவே



அவருடைய கவனத்தை ஈர்க்கின்றன. அவர், உடலளவில் தொந்தரவுகள் ஏற்பட்டாலும், அவற்றைச் சமாளித்துக்கொண்டு, அவ்விடங்களுக்குச் செல்ல நேரம் ஒதுக்கிறார். இருந்தாலும், தன்னால் நீண்ட தூரம் விமானத்தில் உட்கார்ந்து செல்ல முடியாது என்பதால், வெளிநாடுகளுக்குச் செல்வதை அவர் நிறுத்தியுள்ளார். இந்தியாவில் அவர் முடிந்தவரை சாலை வழியாகச் செல்வதையே விரும்புகிறார்.

மாஸ்டர் குழந்தைகளின்மேல், அவர்கள் ஓமேகா பள்ளி மாணவர்களாயினும் அல்லது அப்யாசி பெற்றோர்களுடன் வருபவர்களாயினும், அவர்கள் மீது குறிப்பாக கவனம் செலுத்துக்கிறார். அவர் குழந்தைகளுடன் நின்று பேசுகிறார். குழந்தைகளுக்குப் பெயர் சூட்டுகிறார். வளர்ந்த குழந்தைகளுடன் நகைச்சுவை செய்கிறார். அவர்கள் தலையை தனது கைத்தடி நுனியினால் தொட்டு ஆசிர்வதிக்கிறார். ஏற்கனவே ஒரு புதிய சந்ததியைப் பார்க்க முடிகிறது. அதற்கு காரணமான, கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் மாஸ்டர் நடத்தி வைத்த, இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட சகஜ மார்க்கத் திருமணங்களுக்கு நன்றி.

மாஸ்டர் உயிரோட்டத்துடனும், நகைச்சுவையுடனும் மற்றும் இளமையான மனதுடனும், எப்போதும்போல் தனிச்சிறப்புடைய நினைவாற்றலுடனும் இருக்கிறார். அவர் தாடி வளர்த்துக் கொண்டுள்ளார். ஆனால் அது பாபூஜியினுடைதைக் காட்டிலும் சிறியது. ஆரம்பத்தில் நாங்கள் சிலபேர் இதனால் கவலையடைந்திருந்தாலும், இப்போது அவர் பார்ப்பதற்கு முன்புபோலவே வசீகரமாக உள்ளதைக் காண முடிகிறது. வெகு நாட்களுக்கு முன்னர், அவரது இளம் வயதில், அவருடைய அத்தையொருவர் அவரிடம், " உன்னிடத்தில் பகவான் கிருஷ்ணரிடமுள்ள சில அம்சங்கள் உள்ளன. உனக்கு 90 வயது ஆனாலும் கூட உன்னிடத்தில் இந்த வசீகரம் இருக்கும்" என்று கூறியதாக என்னிடம் சொல்லியிருந்தார். உண்மையில் மாஸ்டரைக் காணும் ஒருவர் ஷேக்ஸ்பியரின் வரிகளான "அந்த வசீகரம் வயதால் அழிவுறாதது, சலிப்படையச்செய்யாதது, அது அளவிடமுடியாததொன்று" என்பதைக் குறிப்பிட்டுக் கூற உந்தப்படுவர்.

- சகோதரர். A.P.துரை







ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

# மாஸ்டரின் வாழ்க்கையில் ஒரு நாள்

மாஸ்டரின் பேத்தி மாதுரி, மாஸ்டரின் தினசரி வாழ்க்கையை மிக அருகில் இருந்து கவனித்ததன் மூலம், கீழ்க்கண்டவாறு பட்டியலிடுகிறார்.

குறிப்பிட்ட ஒரு நாளின் 4.30 a.m. - அமைதி குன்றிய தூக்கத்திற்குப் பின்னர், மாஸ்டர் சூரிய உதயத்திற்கு முன் விழித்தெழுகிறார். குறுகிய நேரத்தில், உடனடியாக காலை தியானத்திற்கு தயாராகிறார்.





5.30 a.m. - தியானத்தை முடித்தவுடன், காபி அருந்துவதற்காகவும், மென்மையான காலைத் தென்றலை அனுபவிப்பதற்காகவும் வராண்டாவிற்கு வருகிறார். அப்யாசிகள் எழுந்து, தயாராகி இந்த நேரத்தில் மாஸ்டருடன் இருக்க எண்ணி, மெதுவாக வரத் தொடங்குகின்றனர். மாஸ்டர் அவர்களுடைய வாழ்த்துகளுக்கு மகிழ்ச்சியுடன் பதிலளிப்பதோடு அவர்களை வரவேற்று பக்கத்தில் அமரும்படி சொல்கிறார்.





6.15 a.m. - இந்த நேரத்தில் காபியைக் குடித்துவிட்டு, அவர்தம் அலுவலகத்தில் அன்றைய பணிகளைச் செய்வதற்காகச் செல்கிறார். அவர் தனக்கு வரும் மின்னஞ்சல்களைப் படிப்பதில் தொடங்கி, அனைத்திற்கும் களைப்பின்றி பதில் அளிக்கின்றார்.

7.00 a.m. - வெவ்வேறு மையங்களில் பணியாற்றவேண்டிய இரண்டு பிரசெப்டர்களைத் தயார்படுத்தும் வேலையை எடுத்துக் கொள்கிறார். அதனை முடித்தபின்னர், தற்போது 8 மணியென்பதை கவனித்து காலையுணவிற்குத் தயாராகிறார்.





8.30 a.m. - மாஸ்டர் காலையுணவை முடித்துவிட்டு, தனது அறைக்குச் செல்கிறார். அங்கு கூடியுள்ள அப்யாசிகளை சந்திக்கிறார். அவர்களுடன் அவர் கலந்துரையாடுவதுடன், புதிதாக திருமணமானவர்கள், அந்த நாளில் பிறந்த நாள் கொண்டாடுபவர்கள், குழந்தைகள் மற்றும் வெகு தூரத்திலிருந்து வந்தவர்கள் என அனைவரையும் சந்தித்து விட்டதை தனது அலுவலகத்திற்குச் செல்லும் முன்னர் உறுதி செய்து கொள்கிறார். மேலும் அங்கு கூடியுள்ளவர்களுக்கு 9 மணிக்கு சிட்டிங் தர உறுதியளிக்கிறார்.





10.00 a.m. - சிட்டிங் முடிந்தவுடன், அவர் அலுவலகத்திற்குச் சென்று மைய நிர்வாகம், ஆசிரமங்கள், நிதி, புதிய கட்டிடங்கள் போன்றவை பற்றிய வேலைகளைப் பார்க்கிறார். பின்னர், சில முக்கிய அலுவலர்களுடன் கலந்தாலோசிக்கிறார்.

11.30 a.m. - மதிய உணவிற்கு முன்பு, கணிப்பொறியில் அவருடைய ருஷ்யப் பாடங்களை சுமார் ஒரு மணி நேரத்திற்குச் செய்கிறார்.

12.30 p.m. - இந்த நேரத்தில், மூன்று ருஷ்ய அப்யாசிகள் அவருடன் மதிய உணவு அருந்துவதற்காக அழைக்கப்படுகின்றனர். அவர் அவர்களது மொழியைப் பயிற்சி செய்வதுடன், அவர்களுடன் இருப்பதில் மகிழ்ச்சியடைகிறார்.

1.30 p.m. - மாஸ்டர் இப்போது ஒரு குறும்படம் பார்க்கச் செல்கிறார். பொதுவாக விலங்குகளின் வாழ்க்கை சம்பந்தமான படங்களையே தேர்வு செய்கிறார்.

2.30 p.m. - மதிய நேர தூக்கத்திற்காக தனது படுக்கையறைக்குச் செல்கிறார். சுமார் அரை மணி நேரம் புத்தகங்கள் படித்துவிட்டு தூங்கிவிடுகிறார்.

5.00 p.m. - அவர் விழித்தெழுந்தவுடன், சுமார் அரை மணி நேரம் தனது சுவாசப் பயிற்சிகளைச் செய்துவிட்டு, காபி குடிக்கத் தயாராகிறார். காபிக்குப் பின்னர், தனது Golf cart மூலம் மணப்பாக்கம் ஆசிரமத்தைச் சுற்றி வருகிறார். வழியில் ஒவ்வொருவரையும் சந்திப்பதுடன், புதிய ஆடிட்டோரியம் தொடர்பான கட்டுமானப் பணிகளின் முன்னேற்றங்களைப் பார்வையிடுகிறார். வழியில் சிற்றுண்டி உணவகத்தில் நின்று, அங்கு கூடியுள்ளவர்கள் மத்தியில் சிறிய அளவில் சிற்றுண்டி எடுத்துக்கொள்கிறார்.

5.30 p.m. - மாஸ்டர் வெளியே தோட்டத்தில் அப்யாசிகளுடன் அமர்ந்து கொண்டு, ஷாஜஹான்பூரில் பாபூஜியுடனான அவருடைய நாட்களைப் பற்றி விவரிக்கிறார். பின்னர் அவர் 45 நிமிடங்களுக்கு ஒரு சிட்டிங் கொடுத்துவிட்டு, மாலை வேலைகளைச் செய்வதற்காக மீண்டும் அலுவலகம் செல்கிறார்.

7.30 p.m. - அவருக்கு வந்துள்ள புதிய மின்னஞ்சல்களுக்கு பதிலளித்ததுடன், தன்னுடைய டைரியையும் எழுதிவிட்டு இரவு உணவிற்குச் செல்கிறார்.

8.30 p.m. - இது தினசரி திரைப்படம் பார்ப்பதற்கான நேரம். அப்யாசிகள் கொண்டுவரும் திரைப்படங்களில் ஒன்றை தேர்வு செய்து, அவர்களுடன் சேர்ந்து படம் பார்க்கிறார்.

10.30 p.m. - மிகுந்த களைப்பினால் நல்ல தூக்கம் வேண்டி படுக்கைக்குச் செல்கிறார்.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்





## திருப்பூரில் மாஸ்டர்

ஏப்ரல் 16 அன்று, மாஸ்டர் திருப்பூர் வைரவிழா பூங்கா ஆசிரமத்திற்குச் சென்றார். 18ம் தேதி, ஞாயிறு சத்சங்கம் காலை 7.30 மணிக்கு நடத்தினார். சுமார் 3000 அப்யாசிகள் இருந்தனர். மாலை, செட்டிப்பாளையம் யோகாசிரமத்திற்குச் சென்றார். ஆசிரமம் மற்றும் மாஸ்டர் காட்டேஜ் நன்கு பராமரிக்கப்பட்டு வருவதைப் பாராட்டினார். சிறிது நேரம் தங்கிவிட்டு, DJ பூங்காவிற்குத் திரும்பினார்.

மாஸ்டர், திருப்பூரிலிருந்து சுமார் 30 கி.மீ. தொலைவில் உள்ள, காங்கேயம் ஆசிரமத்திற்கு, 19ம் தேதி மாலை, சென்றார். மிக அழகான அந்தச் சூழலில், தியான மண்டபத்தின் வெளியே, ஒரு வேப்பமர நிழலில் அமர்ந்து, மாஸ்டர் சிட்டிங் வழங்கினார். அருகில் உள்ள பல்வேறு மையங்களைச் சேர்ந்த சுமார் 300 அப்யாசிகளுக்கு, மாஸ்டர் சத்சங்கம் நடத்தினார். அவர், ஒவ்வொரு மாலையும், இயற்கை அழகையும், தென்றல் காற்றையும் அனுபவித்து மகிழ்ந்த வண்ணம், தோட்டத்தில் அமர்வது வழக்கம்.

மாஸ்டர் அங்கு தங்கி இருந்தபோது, பாபுஜியின் பிறந்த நாள் விழாவிற்கான ஏற்பாடுகள், துரிதகதியில் நடைபெற்றுக் கொண்டிருந்தன. பல மையங்களில் இருந்து வந்திருந்த தன்னார்வத் தொண்டர்கள், விழாவிற்கான இடத்தைத் தயார் செய்து கொண்டிருந்தனர். 15,000 பேர் அமரக்கூடிய மிகப்பெரிய தியான மண்டபம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது.

ஒரு புனிதமான சூழலில், ஏப்ரல் 29 முதல் மே 1 வரை, பூஜ்ய பாபுஜியின் பிறந்தநாள் விழா கொண்டாட்டங்கள், மிகச் சிறப்பாக நடந்தேறின். DJ பூங்கா கோலாகலமாகக் காட்சி அளித்தது. மாஸ்டர் அமரும் மேடை, மற்றும் தியானக்கூடம், மலர்களால் மிக அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்கு கூடியிருந்த 9000 அப்யாசிகளுக்கு மாஸ்டர் சத்சங்கம் நடத்தினார். சத்சங்கத்திற்குப்பின் அவர், புத்தகங்கள், CDமற்றும் DVDக்களை வெளியிட்டார்.

30ம் தேதி மாலை, 5.15 மணிக்கு மாஸ்டர் சத்சங்கம் நடத்தினார். பின்னர் அவர், மஹாராஷ்டிரா மாநிலம், புனே மையத்தின் அப்யாசிகளை சந்தித்து, மாஸ்டர் அவர்கள் மீது கவனம் செலுத்துவது பற்றிய அவர்களின் எதிர்பார்ப்புக்களைப் பற்றிக் கலந்துரையாடினார்.

Malampuzha




மாஸ்டருடன் ஒருவர் இருக்கும் போது, அகங்காரம் இல்லாமல் இருக்கவேண்டும் என்றும், அவரிடம் இருந்து ஒன்றையும் எதிர்பார்க்கக் கூடாது என்றும் விவரித்தார்.

மே5ம் தேதி மாலை, கோயம்புத்தூருக்குச் சென்ற மாஸ்டர், அங்கு 9 மணிக்கு சத்சங்கம் நடத்தினார். அதில், 1000க்கும் மேலான அப்யாசிகள் கலந்து கொண்டனர்.

மாலையில், கோயம்புத்தூரிலிருந்து புறப்பட்டு, மலம்புழா சென்றார். அங்கு சீதோஷ்ண நிலை மிகவும் வெப்பமாகவும், ஈரப்பதம் உள்ளதாகவும் இருந்தது. ஒரு இரவு அங்கு தங்கி, அடுத்த நாள் காலை உணவிற்குப்பின் புறப்படும் திட்டத்துடன் மாஸ்டர் அங்கு வந்தார். அடுத்தநாள் காலை, யானைகளால் ஏற்பட்ட சில பிரச்சினைகளால், சாலைகள் அடைக்கப்பட்டு வாகனங்கள் தடை செய்யப்பட்டன. அதனால் மாஸ்டர் அவ்விடமே தங்க நேர்ந்தது, "என் முதலாளி (பாபுஜி) நான் இங்கு தங்குவதை விரும்புகிறார்" என்று கூறினார்.

மே 7 அன்று, மாஸ்டர் திருப்பூருக்குத் திரும்பினார். 9ந் தேதி ஞாயிறு காலை, DJ பூங்காவில் இருந்த சுமார் 1500 அப்யாசிகளுக்கு சத்சங்கம் நடத்தினார்.

மே 10 அன்று, பல்வேறு மையங்களின் அப்யாசிகளுக்கு, தம்மைத் திருப்பூரில் வந்து சந்திக்க அழைப்பு விடுக்கத் தீர்மானித்தார். அதனால், ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், ஹைதராபாத், மதுரை மண்டலத்தின் அனைத்து மையங்கள் ஆகிய இடங்களிலிலிருந்து அப்யாசிகள் அழைக்கப்பட்டனர். மே 11ம் தேதியில் இருந்து அநேக அப்யாசிகள் DJ பூங்காவில் கூடினர்.

மே 11 முதல் 16 வரை, மாஸ்டர் காலை 6.30 மணி சத்சங்கங்களை நடத்தினார். பல மையங்களிலிருந்து வந்திருந்த 1500க்கும் மேற்பட்ட அப்யாசிகள் இருந்தனர். 16ந் தேதி, மாலை சத்சங்கத்திற்குப்பின், மாஸ்டர், கடந்த சில நாட்களில் அங்கு வந்து, தம்முடன் இருந்த அப்யாசிகள் அனைவருக்கும் நன்றி கூறினார். முடிவில் அவர் ஆற்றிய உரையில், தினசரி தியானம், பத்து நியமங்கள் ஆகியவற்றைக் கடைப்பிடித்து, டிரான்ஸ்மிஷன் மூலம் வழங்கப்படும் செல்வத்தைத் தங்கள் இதயங்களில் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்று அப்யாசிகளைக் கேட்டுக் கொண்டார். உரையின் இறுதியில், இவ்வாறான நிகழ்ச்சிகள் (மாஸ்டருடனான தொடர் சத்சங்கங்கள்) எதிர்காலத்தில் தொடர்ந்து இருக்கும் என்று உறுதி அளித்து, மென்மேலும் பெற்றுக் கொள்வதற்கான இதயங்களுடன் அப்யாசிகள் திரும்ப வரவேண்டும் என்றும் ஆசீர்வதித்தார்.

திருப்பூரில் 1 மாதகாலம் தங்கியபிறகு, 19ம் தேதி மதியம், கோயம்புத்தூருக்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கு அவர் ஒரு அப்யாசியின் இல்லத்தில் தங்கி, அடுத்த நாள் காலை சத்சங்கம் நடத்தினார்.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்


Coimbatore


With LMOIS Students


Chennai

## சென்னையில் மாஸ்டர்

மே 21 காலை 11.30 மணிக்கு, மாஸ்டர் சென்னை வந்து சேர்ந்தார். அடுத்த 3 வாரங்களுக்கு அவர் ’காயத்ரி’ க்கும் மணப்பாக்கம் ஆசிரமத்திற்கும் போய் வந்து கொண்டிருந்தார். 23ந் தேதி ஞாயிறு அன்று, நீண்ட இடைவெளிக்குப் பிறகான, முதல் சத்சங்கத்தைப் பெற்ற சென்னை அப்யாசிகள் பெரு மகிழ்ச்சி அணடந்தனர். மாஸ்டர், இல்லத்தில் இருந்த நாட்களில், உடன் இருந்த சில அப்யாசிகளுடன், மெரினா கடற்கரைக்குச் சிலமுறை சென்று, அமைதியான மாலை நேரத்தை அனுபவித்தார்.

லாலாஜி மெமோரியல் ஒமேகா இன்டர்நேஷனல் பள்ளியின் 10 ஆம் வகுப்பு மாணவர்கள் அனைவரும், பள்ளி இறுதித் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற்று, பள்ளிக்கு 100% தேர்வு முடிவினைத் தேடித் தந்துள்ளனர். மே 28 அன்று, மாஸ்டர் பள்ளிக்கு வருகை புரிந்து, மாணவர்களைப் பாராட்டினார். அன்று மாலை, மகிழ்ச்சியான சூழலில், நன்கு உரையாடினர். கூடியிருந்த மாணவர்களுக்காக, வாழ்க்கையின் முழுப்பயனையும் அடையவேண்டியதன் முக்கியத்துவத்தைப்பற்றிக் கூறிய மாஸ்டர், "நான் எப்பொழுதுமே குழந்தைகளை, வகுப்பில் முதலிடம் பெறவேண்டாம் என்று சொல்வேன். நீங்கள் எப்பொழுதும் முதலிடம் பெற்றால், மக்கள் ஒவ்வொரு முறையும் உங்களிடமிருந்து மிக அதிகமாக எதிர்பார்ப்பார்கள். என் பள்ளி நாட்களில் ராங்க் என்று எதுவும் இருந்ததில்லை. பாடத்தைப்பற்றிய உண்மையான அறிவைப் பெறுவதே முக்கியமாகக் கருதப்பட்டது" என்று கூறினார். ஒருவரது கல்வி, வேலை, பதவி போன்றவைகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்காமல், தருமம், நல்ல உறவுமுறைகள், நன்னடைத்தை மற்றும் அனைத்து மகிழ்வுக்கும் இடமளித்து, வாழ்க்கையை முழுமையாக வாழவேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் விவரித்தார்.

மே 6 அன்று, சத்சங்கத்திற்குப்பின், மாஸ்டர் 8 திருமணங்களை நடத்தி ஆசீர்வதித்து, அப்யாசிகளுடன் கலந்துரையாடினார். மே 7ம் தேதி, ஆந்திர பிரதேசம், கர்நூல் மையத்திலிருந்து, 150 க்கும் மேற்பட்ட அப்யாசிகள், மாஸ்டருடன் சில நாட்கள் தங்கும் பொருட்டு, வந்திருந்தனர். மாஸ்டர், தனது தினசரி நடவடிக்கைகளிலிருந்து சற்று மாறுதலாக, ஆசிரமத்தின் சிற்றுண்டிச் சாலை ருசி கபேயில், அங்கு கூடியிருந்த அப்யாசிகளுடன், இரவு உணவு உண்டார். ஒவ்வொருவரும், மாஸ்டருடன் இருந்தபோதிலும், அவருக்குத் தேவையான இடைவெளியையும் அளித்து, மிகுந்த கட்டுப்பாடுடன் இருந்தனர். மாஸ்டர் இல்லத்தில் இருந்து ஆசிரமத்திற்குத் திரும்பி வந்தபோது, அவரை வரவேற்க, (தெற்கு) ஆந்திரப்பிரதேசத்திலிருந்து வந்து, காத்திருந்த சுமார் 1500 அப்யாசிகளிடத்திலும் இதே ஒழுங்கும், கட்டுப்பாடும் காணப்பட்டது. மாலையில், ஆசிரமத்தைச் சுற்றி வந்த மாஸ்டர், புதிய ஆடிட்டோரியம் கட்டிட வேலைகளையும் பார்வையிட்டார். அவர், தொலைதூரத்தில் இருந்து மணப்பாக்கம் வந்திருந்த அப்யாசிகளுக்காக, அடுத்த 3 நாட்களும், தியானக்கூடத்தில், அடிக்கடி சத்சங்கங்கள் நடத்தினார்.

12ந் தேதி அன்று, மாஸ்டர், ஆந்திரப்பிரதேசத்தில் இருந்து வந்திருந்த 60 அப்யாசிகளை வரவேற்று, அவர்களது வினாக்களுக்குப் பொறுமையாகப் பதிலளித்து, பகலுணவுக்குப்பின் அவர்களை வழிஅனுப்பிவைத்தார். 13ந் தேதி காலை 7.30மணி சத்சங்கத்திற்கு, 5000 க்கும் மேற்பட்ட அப்யாசிகள் வந்திருந்தனர். அதன்பின் மாஸ்டர், இரு திருமணங்களை நடத்தி வைத்தார். அப்யாசிகளுடன் உரையாடிக் கொண்டிருந்தபோது, தெய்வீக விழிப்புணர்வைப் பற்றிப் பேசிய மாஸ்டர், "தியானத்தின் போது ஒவ்வொரு அப்யாசிக்கும் வித்தியாசமான அனுபவம் இருக்கும். அவை எல்லாம் சரியே. ஏனென்றால், தெய்வீகம், தன்னை நம்முடன் இணைத்துக்கொண்டு, ஒப்பற்ற ஒரு உறவினைப் பகிர்ந்து கொள்கிறது. வீணைத் தந்தியின் நாதத்துடன், ஒரு ஒத்திசைவுக் கருவி (tuning fork) எவ்வாறு குறைவற்று ஒருங்கிணைகிறதோ, அவ்வாறே, எல்லா உயிரினங்களும் தெய்வீகத் தன்மையுடன் ஒத்திசைவு பெறும்போது, உண்மையான தெய்வீகத்தை அடைகின்றன." இந்த உரையாடலில் அனைவரும் ஆழ்ந்திருந்தனர். இதன்பிறகு அங்கு கூடியிருந்தவர்களுக்கு சிட்டிங் வழங்கப்பட்டது.

## புதிய பொறுப்புகள்

| | |
|---|---|
| சகோ. K.T. மஞ்சுநாத் | இயக்குநர், புத்துணர்வுமையம் பன்ஷெட், புனே |
| சகோ. டாக்டர் A. பெருமாள் | இயக்குநர், க்ரெஸ்ட், பெங்களூர் |

### மண்டலப் பொறுப்பாளர்

| | |
|---|---|
| சகோ. சேஷாத்ரி வெங்கடாத்ரி | கர்நாடகா (தெற்கு) |
| சகோ. T.Vவிஸ்வநாத் ராவ் | தமிழ்நாடு (தெற்கு) |
| சகோ. மனோஜ் திவாரி | பீகார் & ஜார்க்கண்ட் |
| சகோ. S. பிரகாஷ் | தமிழ்நாடு (வடக்கு) |

### மையப்பொறுப்பாளர்

| | |
|---|---|
| சகோ. பிரபாகர் ரவூரி | பெங்களூர் |
| சகோ. சேகர் ராய் | புவனேஷ்வர் |

### வட்டாரப் பொறுப்பாளர்கள்

| | |
|---|---|
| சகோ. பிரசன்ன கிருஷ்ணா | ஓஷியானியா |
| சகோ. N.S. நாகராஜா | ஐரோப்பா |
| சகோ. ஷரத் ஹெக்டே | ஆப்பிரிக்கா கண்டம் & இந்தியப் பொருங்கடல் தீவுகள் |
| சகோ. வினோத் மிஸ்ரா | சீனா |
| சகோ. வில்லியம் வேகாட் | லத்தின் அமெரிக்கா & கரிபியன் |
| சகோ. சந்தோஷ் ஸ்ரீனிவாசன் | கனடா & USA |
| சகோ. ஸ்ரீதர் கடாம்பி | முந்தைய CIS நாடுகள் |
| சகோ. ஆஷீஷ் சிங் | தென் ஆசியா (ஸ்ரீலங்கா, பூடான், பாகிஸ்தான், நேபால் & பங்களாதேஷ்.) |

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## கடந்தகாலத்தைப்பற்றிய ஒருநோக்கு

1972ம் ஆண்டு, தன் மாஸ்டர் பாபுஜி மகராஜுடன் முதன் முறையாக கடல் கடந்த பயணத்தை மேற்கொண்டபோது, மாஸ்டர் மிக்க கவனமுடன் தயாரித்த குறிப்புக்களைக் கொண்டு வெளியிடப்பட்ட புத்தகத்தின் தலைப்பு 'இன்டியா இன் த வெஸ்ட்' ஆகும். அந்தப்பயணத்தைப் பற்றிய ஒருபார்வை:

எகிப்து - 1972, ஏப்ரல் 16அன்று, பாபுஜி ஷாஜஹான்பூரிலிருந்து தில்லிக்குப் புறப்பட்டுச் சென்றார்.

20 ஏப்ரல் அன்று, நம் மாஸ்டருடன் அவர் பம்பாய் சென்று, அங்கிருந்து அதற்கடுத்த நாள், கெய்ரோவுக்குப் புறப்பட்டார்.

இத்தாலி - அவர்கள் ரோமில் 9 நாட்கள் தங்கியபோது, நிறைய அப்யாசிகளைச் சந்தித்து, அவர்களின் இல்லங்களுக்குச் சென்று, ஆர்வமுடன் வருபவர்களுக்கு அறிமுக சிட்டிங்குகள் கொடுத்து, அவர்களின் வினாக்களுக்குப் பதிலளித்து, புதிய பிரிசெப்டர்களையும் உருவாக்கினர். ஒரு உள்ளூர் கூட்டத்தில், நம் மாஸ்டர், "சகஜ மார்க்கப் பார்வையில் மதமும், ஆன்மீகமும்" என்பது பற்றிப் பேசினார்.

பிரான்ஸ் - ஏப்ரல் 29 - நீஸ், மார்சியெல்லா, லாபுசே மற்றும் பாரீஸ் போன்ற பல இடங்களுக்குச் சென்றனர். ஒரு நாள் மாலை, பாபுஜி, பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஒருவருடன் உரையாடலில் ஆழ்ந்திருந்தார்.

அந்தமனிதர், பலவருடங்களுக்கு முன்பு, திபெத்தில் அப்போது இருந்த தலாய் லாமாவுடன் சில வருடங்கள் இருந்து மூன்றாவது கண்ணைத் திறப்பதற்கான பிரத்யேக முறையையும் கற்றிருந்தார். பாபுஜி, அவரிடம் தன்னை ஆராய்ந்து கண்டறியும்படி கூறினார். அந்த மனிதரும், பாபுஜியின் மாஸ்டர் எப்போதும் அவருடன் இருப்பதாகத் தான் கண்டதைக் கூறினார். பாபுஜி அதனை ஒப்புக் கொண்டார். அதன் பிறகு அவர் பாபுஜிக்கு பிராணாஹுதி கொடுத்தபோது, பாபுஜியும் அம்மனிதரால் அதைச் செய்யமுடிகிறது என்று உறுதிப்படுத்தினார். நேர்மையாகவும், தன் மாஸ்டர் மீது உண்மையான மதிப்பும் கொண்டிருந்த அவர்பால் ஈர்க்கப்பட்ட பாபுஜி, அவரைப்பற்றி திரும்பத் திரும்ப, மிக உயர்வாகப் பேசினார்.

டென்மார்க் - பாபுஜியும், மாஸ்டரும் கோபன்ஹேகன் வந்தடைந்தபோது, அங்குள்ள அப்யாசிகள் சிறப்பான முறையில் வரவேற்றனர்.

மே 12 அன்று, டேனிஷ் வானொலியில் பாபுஜியைப் பேட்டிகண்டபோது, நம் மாஸ்டரும் சில பதில்களைத் தெளிவாக்கினார். மற்ற நாடுகளில் இருந்தும், நிறைய அப்யாசிகள், பாபுஜியைப் பார்க்க டென்மார்க் வந்தனர். உள்ளூர் செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்பட்டு, கோபன்ஹேகனில் நடந்த பொதுக்கூட்டங்களில், சகஜ மார்க்கத்தைப்பற்றிய அறிமுக உரை வழங்கப்பட்டது. அதில் 300க்கும் அதிகமான பேர்கள் கலந்து கொண்டனர்.



## வி பி எஸ் இ - பயிற்சிமுகாம், சென்னை.

ஏப்ரல் கடைசிவாரத்தில், சென்னை பாபுஜி மெமோரியல் ஆசிரமத்தில், தென்மண்டலப் பகுதியில் இருந்து வந்த அப்யாசிகளுக்கான, 3நாள் முகாம் நடைபெற்றது. 12 ஆசிரியர்கள், 3 பள்ளி முதல்வர்கள் அடங்கிய சுமார் 75 அப்யாசிகள், மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றனர். LMIOS மற்றும் SMRTI இணைந்து தயாரித்து வரும், புதிய பாடத்திட்டம் பற்றி கலந்துரையாடப்பட்டது. பங்கேற்பாளர்கள், அதன் பல்வேறு பகுதிகளைப்பற்றிய தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். மிகவும் பயனுள்ளதாக அமைந்த இந்நிகழ்ச்சியில், பங்கேற்பாளர்கள் தங்களின் ஏராளமான கருத்துக்களைத் தெரிவித்தனர்.

பாடத்திட்டம் தயாராகி வருகிறது. ஆரம்பப் பள்ளி பாடத்திட்டம் மிக விரைவில் தயாராகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## வி பி எஸ் இ கோடை முகாம், போபால்

போபால் மையம், 2010 மே 8,9 ஆகிய இரு தினங்களுக்கு, வி பி எஸ் இ கோடை முகாம் ஒன்று ஏற்பாடு செய்திருந்தது. பதிவு செய்திருந்த 76 குழந்தைகளில் 26 பேர், அப்யாசிகள் அல்லாத குடும்பங்களில் இருந்து வந்தனர்.

முதல்நாள், குழந்தைகள் ரோஜா மலர்கள் கொடுக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து, 'Express Yourself' என்ற நிகழ்ச்சியில் அனைவரும் சுய அறிமுகம் செய்து கொண்டனர். நல்ல பழக்கங்கள், தீயபழக்கங்களை அடிப்படையாகக் கொண்ட நாடகம் ஒன்று வழங்கப்பட்டது. அதனை குழந்தைகள் மிகவும் ஆழ்ந்து கவனித்தனர். கடவுள், குரு, நமக்குள் இருக்கும் கடவுள் ஆகிய கருத்துக்கள், சிறிய செயல்பாடுகள் மூலம் காண்பிக்கப்பட்டன. படகு செய்தல், ஒரிகாமி கலை ஆகியவற்றை குழந்தைகள் மிகவும் ரசித்தனர்.

இரண்டாம் நாள், 'இயற்கையுடன் ஒட்டி இருத்தல்' என்ற கருத்து எடுத்துக் கொள்ளப்பட்டு, அதில் பஞ்சபூதங்களான, வாயு, பூமி, ஆகாயம், நீர், நெருப்பு ஆகியவைபற்றி விவரிக்கப்பட்டன. நேரத்தை நிர்வகித்தல், மனத்தூய்மை, கைப்பொம்மைகள், ஒரிகாமி பொம்மைகள் மற்றும் நன்னெறிநோக்கு ஆகியவைகளின் துணையுடன், பல்வேறு சூழ்நிலைகளையும் கையாளும் விதங்கள், நீர் சேமிப்பு, சகோதரத்துவம் பற்றிய கருத்துரைகள், மற்றும் மனித நெறிகளைக் கண்டு கொள்ளுதல் போன்ற பல்வேறு செயல்பாடுகள் நடைபெற்றன. ஒவ்வொரு குழந்தையும் பங்கேற்கும் வண்ணம், அவர்களிடம், குறுநாடகம், பாடல்கள், குழுப்பாடல்கள் ஆகியவைகளைச் செய்துகாட்டும்படி கூறப்பட்டது. தினமும் காலையிலும், இரவு படுக்கைக்குச் செல்லுமுன்பும், மிஷனின் பிரார்த்தனையைக் கூறும்படி குழந்தைகள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். மையப் பொறுப்பாளரான சகோ. பிரபாகர் தாஸ் அவர்களின் நன்றி உரையுடன் முகாம் முடிவடைந்தது. குழந்தைகளுக்கு நினைவுப்பரிசுகளும் வழங்கப்பட்டன.



# வி.பி.எஸ்.இ. செயல்பாடுகள்

முஸபர்பூர் மையத்தில், 12 முதல் 17வரை, பல்வேறு இடங்களில், வி பி எஸ் இ மற்றும் வரவேற்புக் கூட்டங்கள் நடைபெற்றன. இதனை ஒருங்கிணைத்தவர்கள், திரு. R.S. சௌஹான், டேராடூனிலிருந்து லெப்டினட் கர்னல் டாக்டர் மனு சோப்ரா, கஜியாபாத்திலிருந்து சகோதரி சந்திரகாந்தா, திருமதி மது ரோஹில்லா, கர்னல் அனில் குமார் மற்றும் முஸபர்பூர் மையப்பொறுப்பாளர் சகோ. சஞ்ஜீவ் பாரதி ஆகியோர் அடங்கிய குழு ஆகும். இதற்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வண்ணம், இக்குழுவினர், கல்லூரி பேராசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் போர்ப்படை அதிகாரிகளுடனும் கலந்துரையாடினர்.



வி பி எஸ் இ யின் தொடர் நிகழ்ச்சிகள் ஏப்ரல் 12ம் தேதி, பீகார் மற்றும் ஜார்க்கண்ட் மண்டலப் பொறுப்பாளர் சகோ. G.M. பட்நாகர் அவர்கள் முன்னிலையில், பாட்னா மையத்தில் ஒரு நிகழ்ச்சியுடன் ஆரம்பிக்கப்பட்டன. பீகாரின் பல மையங்களில் இருந்து வந்திருந்த, சுமார் 50 அப்யாசிகள் பங்கேற்றனர்.

பிறகு, இக்குழுவினர், முஸபர்பூர் மையத்தில், ஏப்ரல் 13 ந்தேதி அன்று, தயாளுசிங் கல்லூரியில் ஒரு நிகழ்ச்சியை நடத்தினர்.

ஏப்ரல் 14 அன்று, முஸபர்பூர், 151 INF Bn (TA) JAT ல் ஒரு வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. அதில், சகோதரி சந்திரகாந்தா, மற்றும் சகோ. மது ரோஹில்லா இருவரும் வி பி எஸ் இ யின் முக்கியத்துவத்தைப் பல எடுத்துக்காட்டுக்கள் மூலம் தெளிவாக்கினர். 125 க்கும் அதிகமானவர்கள் பங்கேற்றனர்.

ஏப்ரல் 15 ம் தேதி, ஹோலி மிஷன் சீனியர் செகண்டரி பள்ளியின் ஆசிரியர்களுடன், மிகவும் சுவாரசியமான கலந்துரையாடல் ஒன்று நடந்தது, கர்னல் அனில் ரோஹில்லா, பார்வையாளர்களுக்கு, ஆன்மீகத்தின் பொருள் பற்றி விளக்கினார்.

ஏப்ரல் 16 அன்று, மாலிகாட்டில் உள்ள DAV பப்ளிக் ஸ்கூலில் நடத்தப்பட்ட வி பி எஸ் இ நிகழ்ச்சியில், சுமார் 50 ஆசிரியர்கள்கலந்து கொண்டனர்.

ஏப்ரல் 17 அன்று, வி பி எஸ் இ பயிற்சி வகுப்புக்களில் பங்கேற்றும் வரும் சுமார் 60 ஆசிரியர்கள், மதுபனியில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு வரவேற்புக்கூட்டத்திலும் கலந்து கொண்டனர். மதுபனி, முஸபர்பூரிலிருந்து சுமார் 110 கி.மீ. தொலைவில் உள்ளது.

ஜாம்நகர் மையத்தில், மூன்றாவது தடவையாக, ஒருமாதகால வி பி எஸ் இ பயிற்சிமுகாம் ஒன்று நடந்தது. மே 5 ம் தேதியிலிருந்து தொடங்கிய இம்முகாமில், 5-13 வயதுக்குட்பட்ட 80 குழந்தைகள் பங்கேற்றனர். அதில் 40 பேர் தொடர்ந்து பங்கேற்பவர்கள். இம்முகாமில், குரு, கடவுள், அன்பு, பிரார்த்தனை, ஒழுக்கம் மற்றும் மரியாதை போன்ற பல்வேறு பொருட்களைப் பற்றி விவரிக்கப்பட்டது. மாலை பிரார்த்தனைக்குப் பிறகு, குழந்தைகள் தங்களுக்கு விருப்பமான விளையாட்டுகளை விளையாடும்படி ஊக்குவிக்கப்பட்டனர்.

முகாமின் இறுதிநாளில், நிறைவு நிகழ்ச்சிக்காகக் குழந்தைகளின் பெற்றோர்கள் அனைவரும், தியானக்கூடத்தில் வரவேற்கப்பட்டனர். குழந்தைகள் வழங்கிய பல்வேறு நிகழ்ச்சிகளைக் காண 100 க்கும் அதிகமானோர் கூடி இருந்தனர். பங்கேற்றவர்களுக்கு, அழகு, கவனிப்பு ஆகியவற்றின் சின்னமான ரோஜா செடிகள் பரிசளிக்கப்பட்டன. இம்முகாமில் பங்கேற்ற பின்னர், குழந்தைகள் தொலைக்காட்சி பார்க்கும் நேரம் மிகவும் குறைந்து விட்டதாகப் பெற்றோர்கள் கருதினர். மேலும், காலையிலும், உணவு உண்ணும் முன்பும் மற்றும் தூங்குவதற்கு முன்னாலும் பிரார்த்தனை கூறவும் கற்றுக்கொண்டனர்.

மத்தியப்பிரதேசம், விதிஷா மையம், மே 15, 16 ஆகிய இரு நாட்களுக்கு, வி பி எஸ் இ கோடை முகாம் ஒன்றை ஏற்பாடு செய்தது. முதல் நாளன்று, 'கடவுளும் குருவும்' மற்றும் 'மற்றவர்களிடம் பணிவுடனும், மரியாதையுடனும் நட' போன்ற கருத்துக்கள் விளக்கப்பட்டன. இந்த நன்னெறிகளை விளக்கும் வண்ணம், குறுநாடகங்கள், விளையாட்டுக்கள் மற்றும் விஞ்ஞான பரிசோதனைகள் ஆகியவற்றை சகோதரி அஞ்சலி மற்றும் சகோ. பிரமோத் ஆகியோர், தன்னார்வத்தொண்டர் குழுவின் உதவியுடன் நடத்தினர். இரண்டாவது நாள் அன்று, 'ஒழுக்கம்' என்ற தலைப்பு எடுத்துக் கொள்ளப்பட்டு, பல்வேறு செயல்பாடுகள் மூலம் விளக்கப்பட்டது. உடல் நலத்தின் அவசியத்தை விளக்கும் விதமாக, குழந்தைகளுக்கு யோகா பயிற்சிகளும் கற்றுத்தரப்பட்டன.

## ஜாவோரா



இந்தூர், ஜாவோரா என்றும் இடத்தில், ஜெயின் இளைஞர் குழு ஏற்பாடு செய்திருந்த 9 நாள் முகாமின் ஒரு பகுதியாக, மே 12, 13 அன்று, குழந்தைகளுக்காக, வி பி எஸ் இ நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது.

முகாமின் கடைசி இருநாட்களில், வி பி எஸ் இ நிகழ்ச்சி நடைபெற்றது. 5 பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட இந்நிகழ்ச்சி, 10 சகோதர சகோதரியரைக் கொண்ட தொண்டர் குழு ஒன்றால் நடத்தப்பட்டது. அன்பு, மரியாதை, கேட்டறிதல் மற்றும் தொடர்புகொள்ளுதல், ஒத்துழைத்தல், பங்கீடு செய்துகொள்ளுதல் ஆகிய 5 நன்னெறிகளைப் பற்றிக்கூறப்பட்டன. ஒவ்வொரு நன்னெறியும், 'தனக்காகக் கையாளுதல்', 'சுற்றுப்புறத்திற்காகக் கையாளுதல்' மற்றும் கடவுளுக்காகக் கையாளுதல் ஆகிய மூன்று பகுதிகளில் விவரிக்கப்பட்டன.

13 - 16 வயதுள்ள, 40 குழந்தைகள் இருந்தனர். சகோதரி யாமினி கர்மர்கர், சகோ. ராஜேஷ் ராவேர்கர் ஆகியோர் நடத்திய முதல்பகுதி, நிறைய உதாரணங்களுடனும், பரிசோதனைகளுடனும் இருந்தது. நன்னெறிகளே, நம்மை வளர்ச்சி, ஆனந்தம், மற்றும் சூட்சுமத்தன்மை ஆகியவற்றை நோக்கிச்செல்ல உதவும் என்று குழந்தைகள் கூறினர்.

உடலின் உணர்வுகளை புரிந்து கொண்டு, அதன்படி நல்ல ஆரோக்கியம் அடைதல், சரியான மனப்பாங்கு கொள்ளுதல்,

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

தோல்விகளை வெற்றிக்கு படிக்கற்களாக அமைத்துக்கொள்ளுதல், மிதமான அணுகுமுறையை கைக்கொள்ளுதல், பெரியவர்களை மதித்து நடத்தல், அடுத்தவர்களைப்பற்றி அக்கறை கொள்ளுதல், ஒத்துழைத்தல் மற்றும் பகிர்ந்து கொள்ளுதல் போன்றவை பயிற்சியின் அனுபவமாக அமைந்தது. சகோ.சேகர் சர்மா, சகோதரி ப்ரீதி சர்மா மற்றும் சகோதரி வினிதா ராவேர்கர் முதலியோர், கதைகள், சிறு நாடகங்கள், மற்றும் விஞ்ஞான பரிசோதனைகள் மூலம் விவரித்து நடத்தி வைத்தனர். இந்நிகழ்ச்சி சிரிப்புக்களாலும் கண்ணீராலும் நிரம்பி வழிந்தது. ஆனால், முக்கியமான சாராம்சத்தை பங்கேற்றவர்கள் புரிந்து கொண்டனர்.

மூன்றாவது பகுதி, கடவுளின் தன்மை பற்றிய மதிப்பை ஒருமுகப்படுத்தும் விதமாக அமைந்தது. அவர் நம்முள் வசிப்பதினால், மற்ற சகோதர சகோதரிகளை மதித்து நடத்துவதிலும், அவர்களுடன் அன்பு பாராட்டுவதின் மூலமும், இயற்கை வளங்களை மதித்து, அவற்றை சரியான விகிதத்தில் உபயோகிப்பதின் மூலமும், அவரிடம் அன்பும் மதிப்பும் கொண்டிருப்பதை வெளிப்படுத்தமுடியும். கடைசியாக பங்கேற்றவர்கள், நான்கு குழுக்களாக பிரிந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புக்களில் கருத்துப்பரிமாற்றம் செய்து கொண்டனர். சகோ.வினோத் சாதே, சகோ.ஸ்ரீராம் திராவிட் மற்றும் சகோ.ராஜேஷ் இதை நடத்தினர். குழந்தைகள், தங்கள் வாழ்க்கையில் எவ்விதமான மாற்றங்களை விரும்புகின்றனர் என்பதை பற்றி, ஒரு அட்டவணை தயாரித்தனர். சிறு மாற்றங்களாக இருப்பினும், அவை நடைமுறைக்கு ஏற்ற வண்ணம் அமைந்திருந்தன. சிறார்களின் ஆர்வமிக்க பங்கேற்பு, தன்னார்வ தொண்டர்களை மகிழ்ச்சியுறச்செய்தது. மனம் திறந்த, நெகிழ்வுடன்கூடிய, தெய்வாம்சம் பொருந்திய VBSE பாடத்திட்டத்தை மாஸ்டர் அளித்தது, அனைவர் மனங்களையும் தொட்டது.
நிறைவு விழாவில், நிர்வாகக்குழுவிலுள்ளவர்களும், இதர சமூகத்தொண்டர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். சகோ.ராஜேஷ் மிஷனைப்பற்றிய சிறு அறிமுகம் அளித்தார்.

## புது ஒளி மையங்கள்
## காசர்கோடு,கேரளா

காசர்கோடு மையத்தின் தியான மண்டபம், மே மாதம் 2ம் தேதியன்று திறந்து வைக்கப்பட்டது. இம்மையம் ஜனவரி2007இல் நிறுவப்பட்டது. இது, கேரளாவின் வடக்குப்பகுதியின் கடைசி நகரான காசர்கோட்டிலிருந்து 16 கி.மீ. தொலைவிலுள்ள பேலா என்ற குக்கிராமத்தில், கண் மருத்துவமனையின் நடுவில் அமைந்துள்ளது. இந்த மருத்துவமனையின் பணியாளர்களில் பெரும்பாலானோர் அப்யாசிகளாவர். சகோ.T.Vஉன்னிகிருஷ்ணன் (மையப்பொறுப்பாளர்,பையனூர்) காலை 7:30க்கு சத்சங்கம் நடத்தினார். இதில் 60 அப்யாசிகள் கலந்து கொண்டனர். பிறகு அவர் திறப்புவிழாக் கல்லின் திரை அகற்றினார். அதன் பின் நடந்த நிகழ்ச்சியில், அப்யாசிகள் பேசினர். சிறார்கள் மற்றும் மருத்துவமனை பணியாளர்களின் கலை நிகழ்ச்சி அதன் பின் நடைபெற்றது. பின், சகோ.உன்னி கிருஷ்ணன் பேசுகையில், அம்மையம் ஆன்மீகத்திற்கும் பொருள் சார்ந்த வாழ்க்கைக்கும் சமமான பங்கீடு கொண்டுள்ளதெனக் கூறினார். மருத்துவமனையின் தலைவர் திரு.நீலகண்டன், ஒழுங்கான வாழ்க்கைமுறை, சுகாதாரத்தின் முக்கியத்துவம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றைப்பற்றி பேசினார். சகோ.ஜயசங்கர் I.R.S.(உதவி ஆணையர்,வருமானவரி, நாக்பூர்) பேசும் பொழுது, மனித வாழ்வில் சேவை புரிவதின் அவசியத்தை வலியுறுத்தினார். மருத்துவமனை நிர்வாகி சகோ.பிரசெப்டர் உமேஷ், Dr.சுனில், மருத்துவமனை ஆலோசகர் சகோ.Dr. K. நாராயணன், சேவனா டிரஸ்டின் தலைவர் திரு. பிலிப்போஸ் முதலியர்களும் பேசினர். மாஸ்டரின் அன்பும் அருளும் விழா முழுவதிலும் பொழியக்காண முடிந்தது.

## திடோடி, சௌராஷ்ட்ரா






மாஸ்டரின் அருளால் சௌராஷ்ட்ராவில், குறிப்பிட்டுச்சொல்லும்படி, ஜாம் நகரிலிருந்து, துவாரகா வரையில் கடந்த 2-3 மாதங்களில் மிஷனின் செயல்பாடுகள் துரிதமாக நடந்தன. கம்பாலாவிற்கு அருகிலுள்ள மையமான திடோடிக்கு, சகோ.ராஜேஷ் அகர்வால், (மண்டலப்பொறுப்பாளர், குஜராத்) ஜூன் 13 ம் தேதி விஜயம் செய்தார். அங்கு, 7 அப்யாசிகள்தான் ஒழுங்காக சாதனாவை கடைப்பிடித்திருந்தனர். அவர்கள், மற்ற அப்யாசிகளையும் சந்தித்து ஒழுங்காக சாதனாவை கடைப்பிடிக்க வேண்டிக்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டனர். மாஸ்டரின் அருளால் 20 அப்யாசிகள் ஞாயிறு சத்சங்கத்திற்கு திரும்பி வரத்தொடங்கினர். மண்டலப் பொறுப்பாளர்-குஜராத், மற்றும் 25 அப்யாசிகள் முன்னிலையில், சகோ.ஷவின் படேல் தியானக்கூடத்தை திறந்து வைத்தார். திடோடி, சௌராஷ்ட்ராவிலுள்ள ஒரு சிறிய கிராமமாகும். மிஷனின் மையம், இங்கு மூன்று ஆண்டுகளாக இயங்கி வருகிறது. இக்கிராமத்தில் சுமார் 2500 பேர் வசிக்கின்றனர்.

## ஜாம் நகரில் உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு நாளை ஒட்டி மரம் நடு விழா

ஜூன் 5ம் தேதி, உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு நாளை ஒட்டி, ஜாம் நகர் மருத்துவக்கல்லூரியைச்சேர்ந்த அப்யாசிகள், தங்கள் கல்லூரி வளாகத்தில், மற்ற அப்யாசிகள், சகோ.சசின் வியாஸ் (மையப்பொறுப்பாளர் - ஜாம் நகர்) முன்னிலையில் மரக்கன்றுகள் நட்டனர். மாலையில் முனிசிபல் கார்ப்பொரேஷனின் அங்கத்தினர்கள் திருமதி ஹர்ஷிதா பாண்டியா, திருமதி சஹாரா மக்வானா மற்றும் சகோதரி சகோயா முதலியோர் அழைக்கப்பட்டிருந்தனர். சுமார் 40 சிறார்களும் அவர் தம் பெற்றோர்களும் வருகை புரிந்து ஊக்குவித்தனர்.







# அப்யாசி பயிற்சி திட்டம்

## குவாலியர்



மாஸ்டரின் அருளால், குவாலியர் மையத்தில், மே மாதம் 14-16 தேதிகளில், அப்யாசி பயிற்சித்திட்டம் நடைபெற்றது. இதில் 31 அப்யாசிகள், குவாலியர் மற்றும் புற நகரங்களிலிருந்து வந்து கலந்து கொண்டனர். மே 14ம் தேதி பங்கேற்றவர் கூடி தனித்தனியாக சிட்டிங் எடுத்துக்கொண்டு, பயிற்சி திட்டத்திற்கு தங்களை தயார் படுத்திக்கொண்டனர். மாலை சத்சங்கம் 7 மணிக்கு நடந்த பின், வரவேற்புரை அளிக்கப்பட்டது. பின், இப்பயிற்சிதிட்டத்தின் நோக்கம், வழிமுறை பற்றி ஒரு நாடகம் மூலம் விளக்கமளிக்கப்பட்டது.

மே 15ம் தேதி, முதல் பகுதியாக, லட்சியத்தை உறுதிப்படுத்துவதன் முக்கியத்துவம், தியானமும் குழு சத்சங்கமும் என்ற

தலைப்புக்களில் பேசப்பட்டன. பின் அவற்றின் மீது குழு விவாதமும், வினா விடையும் நடைபெற்றன. இரண்டாம் பகுதியில் சுத்திகரிப்பு மற்றும் நாட்குறிப்பு எழுதுவதைப்பற்றி கலந்துரையாடப்பட்டன. அவை மீது குழு விவாதமும் வினாவிடை நிகழ்ச்சியும் நடைபெற்றன. மூன்றாம் பகுதியில், 10 நியமங்கள் பற்றிய சொற்பொழிவும், அதன்மீது கலந்துரையாடலும் நடத்தப்பட்டன. அன்று, முதல் மூன்று நியமங்கள் விவாதிக்கப்பட்டன. மே 16ம் தேதி, முதல் பகுதியாக, முன் தினம் நிறைவு செய்யப்படாத மற்ற 7 நியமங்கள் மீது, கலந்துரையாடல் நடைபெற்றது. இரண்டாம் பகுதியில், பிரார்த்தனை மற்றும் நிலையான நினைவு பற்றி குழு விவாதமும், வினா விடை நிகழ்ச்சியும் நடைபெற்றது. மூன்றாவது பகுதியில், அன்பும் நன்றியும் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றப்பட்டது. எல்லா நாட்களிலும், காலை 4 மணியிலிருந்து தியானம், சுயஆய்வு, புத்தகம் படித்தல், மௌனம் காத்தல் என்ற நியதியில் இயங்கினர். மாலையில் தனி சிட்டிங், சுத்திகரிப்பு, பஜன்கள், உலகளாவிய பிரார்த்தனை முதலியன இடம் பெற்றன.

## தில்லி

அப்யாசி பயிற்சித்திட்டம் - முதல் நிலை, R.K.புரம், தில்லி ஆசிரமத்தில், மே 23ம் தேதி நடைபெற்றது. இதில் தில்லி மற்றும் குர்காவினிலிருந்து 30 அப்யாசிகள் கலந்து கொண்டனர். சகோ.க்யான் சரீன் இதை நடத்தி வைத்தார். ஞாயிறு சத்சங்கத்திற்கு பின், காலை 9:30க்கு ஆரம்பித்து மதியம் 2:30மணிக்கு நிறைவுற்றது. எல்லா அப்யாசிகளும் இதை வரவேற்று, சகஜ மார்க்கத்தைப்பற்றி முழுமையாக அறிந்துகொள்ள மிகவும் உதவியது எனக்கூறினர். இத்திட்டத்தை அளித்த விதத்தை பாராட்டினர்.

## மிர்ஸாபூர், உ.பி.

மிர்ஸாபூரில் முதன் முறையாக, ஜுன் 6ம் தேதியன்று, சகோ.சுரேஷ் குமார் திரிபாதியின் இல்லத்தில்,

மண்டலப்பொறுப்பாளர் ஷ்யாம் மெஹ்ரோத்ராவின்



உந்துதலால், அப்யாசி பயிற்சி திட்டம் நடத்தப்பட்டது. இதில் 32 அப்யாசிகள் கலந்து கொண்டு ஆன்மீக ஆதாயம் அடைந்தனர். கான்பூர் மைய சகோதரி.அஞ்சு ஸ்ரீவாஸ்தவா, லக்னோ மையத்தின் சகோ.சுலப் சோனி இதை முன்னின்று நடத்தினர். இளைய தலைமுறையினர் இதில் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். புது அப்யாசிகளின் தேவைக்கேற்பவும், செயல் முறை, மற்றும் வழிமுறைகளில் அவர்களின் ஆர்வத்தை கருத்தில் கொண்டும், இத்திட்டம் வடிவமைக்கப்பட்டது. சாதனா, சுத்திகரிப்பு, நிலையான நினைவு போன்ற பொருட்களின் மீது சிறப்பு விவாதங்கள் நடத்தப்பட்டன. இதனால் அப்யாசிகள் மார்க்கத்தின் எல்லா அம்சங்களிலும் தெளிவு பெற்றனர். அவர்களின் சுய மதிப்பீட்டிற்கும் அது உதவியது.

## புது அப்யாசிகளுக்கான பயிற்சித்திட்டம், இந்தூர், ம.பி.

மே 23ம் தேதி, ஞாயிறன்று புது அப்யாசிகளுக்காக இந்தூர் மையத்தில் பயிற்சி முகாம் நடந்தது. பயிற்சி பெறுபவர் குழுக்களாக பிரிக்கப்பட்டனர். ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு பிரசெப்டரோ, பயிற்சியாளரோ ஒருங்கிணைப்பளராக பொறுப்பேற்றனர். கீழ்ப்படியுமுன்னரே, அப்யாசிகள் மார்க்கத்தின் வெவ்வேறு அம்சங்களின் நுணுக்கங்களை அறிய விரும்புவது, ஒரு பொது பிரச்சினையாக இருந்தது. நிகழ்ச்சியின் முடிவில், அப்யாசிகள், கீழ்ப்படிதலை நம் பழக்கத்தில் கொண்டுவரவேண்டியதன் அவசியத்தை உணர்ந்தனர். சுத்தகரிப்பு, தியானம் மீது வினா விடை நிகழ்ச்சி நடந்தது. 10 நியமங்கள் மீதும், தனி கவனம் செலுத்தப்பட்டு அவை நன்கு புரியும் வண்ணம், ஆழ்ந்த விவாதங்கள் நடத்தப்பட்டன. எல்லாவற்றிற்கும் மேலாக, மாஸ்டரின் உதவிதான் முக்கியம் வாய்ந்தது, என்பதைப்பற்றியும் பங்கேற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளப்பட்டது.

## சாதனா பயிலரங்கு, தென்காசி

தமிழ்நாடு, நெல்லை மாவட்டத்திலுள்ள, தென்காசி என்ற ஊரில், ஜுன் 13ம் தேதியன்று, சகஜ மார்க்கத்தில் சாதனா என்ற தலைப்பில், ஒரு பயிலரங்கிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தென்காசி ஒரு சிறிய மையமாக இருப்பினும், புளியங்குடியிலிருந்து வந்திருந்த 6 அப்யாசிகளுடன், 21 அப்யாசிகள் இதில் பங்கேற்றனர். அவர்கள் 4 குழுக்களாக பிரிக்கப்பட்டு, சாதனா மற்றும் ஆன்மீகம் பற்றி ஆழ்ந்து விவாதித்தனர். நிகழ்ச்சி முழுவதும், மாஸ்டரின் அருளில் ஆழ்ந்திருந்ததை உணர்ந்ததாக கூறினர். பூஜ்ய ஸ்ரீ பாபுஜி மஹராஜ் ஒளி உலகத்திலிருந்து அருளிய "மகிழ்ச்சி அருளை ஈர்க்கிறது" என்ற கூற்று மெய்விக்கப்பட்டது. எல்லா அப்யாசிகளுக்கும் இப்பயிலரங்கு மனங்களில் சிந்தனையை தூண்டும் விதமாக அமைந்தது.

July 2010 Volume 3 Issue 4

SHRI RAM CHANDRA MISSION®
ECHOES INDIA NEWSLETTER

## லக்னோவில் 24 ஜூலை விழாவிற்கான, ஏற்பாடுகள்







லக்னோவில், 24 ஜூலை 2010 அன்று நடைபெறவுள்ள, மாஸ்டரின் 84வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, ஏற்பாடுகள் முழுவீச்சில் நடந்து கொண்டிருக்கின்றன. பரந்து விரிந்த லக்னோ ஆசிரமத்தில், கட்டிட வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. தங்கும் கூடாரங்கள், சமையல் கூடம், விற்பனை கூடங்கள் முதலானவை உருப்பெற தொடங்கி விட்டன. புது தியான மண்டபம் கட்டிமுடிக்கப்பட்டுவிட்டது. சாலைகளும், தங்கும் விடுதிகளும் முழுமை பெறும் வண்ணம் உள்ளன. ஆசிரமத்திற்கு பொலிவூட்டும் வண்ணம் ஒரு பெரிய நுழைவாயில் கட்டப்பட்டிருக்கிறது. எண்ணற்ற அப்யாசிகள் வருவதை கருத்தில் கொண்டு, கட்டிட வேலைகளும், இதரவேலைகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. தன்னார்வத்தொண்டர் குழுக்கள், குறிப்பிட்ட நேரத்தில் எல்லா வேலைகளையும் முடிக்கும் பொருட்டு இரவு பகலாக உழைத்துக்கொண்டிருக்கின்றனர்.

## முதல் ஆண்டு விழா, சிக்கநாயகன ஹள்ளி, கர்நாடகா

ஜூன் 13ம் தேதியன்று, கர்நாடகாவிலுள்ள சிக்கநாயகன ஹள்ளி மற்றும் ஹூலியார் மையங்கள், தங்களுடைய முதலாவது ஆண்டு விழாவை கொண்டாடினர். சிக்கநாயகன ஹள்ளியில் 35 அப்யாசிகளும், ஹூலியாரில் 20 அப்யாசிகளும் தற்சமயம் உள்ளனர். உள்ளூர் அப்யாசிகளால் முழு நாள் விழா கொண்டாடப்பட்டது. தும்கூர், திப்தூர்C.N.ஹள்ளி, மற்றும் ஹூலியார் மையங்களிலிருந்து 70 அப்யாசிகள் கலந்து கொண்டனர். சகஜ மார்க்கம் - ஒரு வாழ்க்கை முறை என்ற தலைப்பில் சாதனாவின் பல்வேறு பரிமாணங்கள் வெளிக்கொணரப்பட்டன. அதன் பின், புது அப்யாசிகளின் அனுபவங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன. மாலை சத்சங்கத்திற்குப்பின் அன்புக்குரிய மாஸ்டரின் நினைவுடன் அவரவர் தத்தம் மையங்களுக்கு புறப்பட்டுச்சென்றனர்.

ஏப்ரல் 8ம் தேதியன்று, சகோ.சத்யநாராயணா சிக்மளூரில், தனது இல்லத்தில் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

இதில் 40 அப்யாசிகள் கலந்து கொண்டனர். ஒளி மையத்திலிருந்து வந்திருந்த ஒரு செய்தி கன்னடத்தில் மொழிபெயர்க்கப்பட்டு படிக்கப்பட்டது. மதிய உணவிற்கு பின், சகோதரி நாகரத்னா, சகோ.ராமசந்த்ரா, சகோ.தினேஷ் கோகலே, சகோ.சதீஷ், சகோ.தேவராஜ், சகோதரி பரிமளா முதலியோர் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் பொழுது, எவ்வாறு ஒழுங்கு முறையான சாதனாவும், நிலையான நினைவும் தங்கள் வாழ்வில் உதவி புரிகிறது என்பதை பற்றி எடுத்துரைத்தனர். மையத்தை மேம்படுத்தும் பொருட்டு, பல ஆலோசனைகள் அளிக்கப்பட்டன. மாலை 6 மணி சத்சங்கத்துடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

## குஜராத், வதோதராவில் விளையாட்டு விழா

மே 30ம் தேதியன்று, அப்யாசிகளின் குழந்தைகளுக்காக, வதோதராவின் தன்னார்வத்தொண்டர்கள் விளையாட்டுப் போட்டிகள் நடத்தினர். ஆசிரம வளாகப் புல்வெளியில், சத்சங்கம் நடக்கும் நேரத்தில் நடத்தப்பட்ட இப்போட்டிகளில் 3லிருந்து 15 வயது வரையிலுள்ள 25-30 குழந்தைகள் கலந்து கொண்டனர். வயது விகிதம் படி குழந்தைகள் பிரிக்கப்பட்டனர். உருளைகிழங்கு ஓட்டம் (மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு), 100 மீட்டர் ஓட்டம் (5-10 வயது சிறார்களுக்கு), தேக்கரண்டியில்

எலுமிச்சை, மற்றும் சாக்குப்பை ஓட்டம் (10 வயதிற்கு மேற்பட்ட சிறார்களுக்கு) முதலியன நடத்தப்பட்டன. குழந்தைகள் யாவரும் எல்லா போட்டிகளையும் நன்கு அனுபவித்தனர். இப்போட்டிகள், குழந்தைகளுக்கு, அவர்களுக்குள் ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையையும், யாவரும் சேர்ந்திருக்கும் மனப்பாங்கையும் வளர்த்தது. தன்னார்வ தொண்டர்களும், பெற்றோரும் இந்நிகழ்ச்சியை மகிழ்சியுடன் ரசித்தனர்.





ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

# ஒளி மையம்

"நீங்களே சோதனைக்குரியவர், நீங்களே சோதனை செய்பவர், நீங்களே சோதனையின் முடிவுமாவீர். நீங்கள் மாஸ்டருக்காகவோ, மிஷனக்காகவோ பொறுப்பேற்கிறோம் என நினைத்தால் அது அறிவற்ற செயலாகும். அம்மாதிரி ஒரு பொறுப்பும் இல்லை; அது எப்பொழுதுமே சுயமுன்னேற்றதிற்கான பொறுப்பு மட்டுமேயாகும். இதை யாரெல்லாம் நினைவு கூர்கிறார்களோ, அவர்கள் வருங்காலத்தில் விவேகமாக நடந்து கொள்வர். யாரெல்லாம் இதை மறந்து விட்டார்களோ, அவர்கள் அறிவிலித்தனமாக நடந்து கொள்வர். அவர்களுக்கு எதிர்காலம் இருண்டதாக இருக்குமெனக் கூற நான் மிக வருத்தப்படுகிறேன்."

## கௌஹாத்தி ஆசிரமம்




வடகிழக்கு மாநிலமான அஸ்ஸாமின் தலை நகர் கௌஹாத்தியில், புதிதாக ஆசிரமம் அமைந்துள்ளது. தின்சுகியாவின் ஆசிரமம் பழமையானது. அது பூஜ்யஸ்ரீ பாபூஜி மஹராஜின் வருகையால் அருள் பெற்றதாகும்.

பிப்.12, 1993ம் வருடம், கௌஹாத்தி மையம் மாஸ்டரை வரவேற்கும் பேறு பெற்றது. அப்பொழுது சத்சங்கங்களும் இதர நிகழ்ச்சிகளும் கல்யாண் பவனில் நடைபெற்றன. மாஸ்டர், அடிக்கடி, அஸ்ஸாம் தனக்கு புதியது ஒன்றுமில்லை எனவும், தன் சித்தப்பா திரு.பத்ரன் இந்திய வனத்துறை அதிகாரியாக அங்கு இருந்த பொழுது, சிறுவயதில் தான் அங்கு பல மைல்கள் நடந்து சென்றதாகவும், குதிரை மற்றும் யானை சவாரி செய்ததையும் கூறினார். அப்பொழுது கௌஹாத்தி வனமாக இருந்ததையும், ஒரு பெரிய நதி ஓடிக்கொண்டிருந்ததையும் அன்புடன் நினைவு கூர்ந்தார். அவரின் இளமைக்காலத்தில் எப்பொழுதெல்லாம் உலகப்பயணம் மேற்கொண்டாரோ, அப்பொழுதெல்லாம் பூஜ்யஸ்ரீ பாபூஜி மஹராஜின் ஆன்மீக வேலை முழு வீச்சில் நடந்து கொண்டிருந்ததாக கூறினார். அஸ்ஸாமும் அதில் அடக்கம் எனவும் கூறினார். அவர், இதர அப்யாசிகளை, உள்ளூர் மொழியைக்கற்று அவர்களுடன் கலந்துரையாடி, அவர்களை மிஷனில் சேர ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.



6500 சதுர அடி கொண்ட ஒரு கச்சிதமான இடம், 1998ம் ஆண்டு, பாதி நன்கொடை மூலமும் பாதி விலை கொடுத்தும் வாங்கப்பட்டது.

அதில், ஒரு அழகிய மூங்கில் கூடம் தற்காலிகமாக நிறுவப்பட்டுள்ளது. இதற்கு முன் சத்சங்கங்கள் 'மைத்ரி மந்திர்' அனாதை விடுதியில் நடந்து வந்தன.

2009ம் வருடம், ஆசிரமம் பாதி நிரந்தரமாக கட்டிமுடிக்கப்பட்டது. இதில் 1600 சதுர அடியில் தியானக்கூடம் அமைந்துள்ளது. ஞாயிறன்று, சத்சங்கத்திற்கு வரும் சுமார் 100 அப்யாசிகளுக்கு இது போதுமானதாக உள்ளது. தவிரவும், அலங்கரிக்கப்பட்ட மாஸ்டரின் குடில், சமையல் கூடம், குழந்தைகள் வளாகம், பாதுகாப்பாளர் அறை, மற்றும் வரவேற்பறை முதலியனவும் கட்டப்பட்டுள்ளன. கட்டிடத்தின் மூன்று பக்கங்களிலும் அழகான தோட்டம் உள்ளது. மிஷனின் விழாக்களை நடத்தவும், மண்டல அளவில் அப்யாசி பயிற்சி திட்டங்களை நடத்தவும் இவ்விடம் மிக ஏற்றதாக அமைந்துள்ளது.



2004ம் வருடத்தில், சகோ. U.S.வாஜ்பாய், அஸ்ஸாம் மற்றும் வட கிழக்கு மாநிலங்களுக்கு வருகை புரிந்த போது, இங்கும் வந்துள்ளார். சகோதரி சீதா குஞ்சிதபாதம் அஸ்ஸாம், மற்றும் வடகிழக்கு மாநிலங்களுக்கான அப்யாசிகளுக்கு 2007ம் வருடம் இங்கு V.B.S.E பயிலரங்கு நடத்தியுள்ளார். சகோ. A.P. துரை, கௌஹாத்தி சுத்திகரிப்பு ஆலையில் 2008ம் வருடம் தியானபயிற்சித்திட்டம் நடத்தினார். தற்போதுள்ள அப்யாசிகளின் எண்ணிக்கையை நோக்குங்கால், இவ்வாசிரமம் போதுமானதாக உள்ளது. இருப்பினும், எதிர்கால விரிவாக்கத்தை மனதில் கொண்டு, விமானநிலையம் அருகே ஒரு பெரிய இடம் வாங்கப்பட்டுள்ளது. அதில், அஸ்ஸாமின் மண்டல ஆசிரம வளாகம் அமைக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. இம்மண்டல ஆசிரம இடத்தில் வீடுகள் கட்டவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாஸ்டர் 'சகஜ மார்க்க சொஸைட்டி' என்று பெயரிட்டு கருணயுடன் ஆசீர்வதித்தார்.



மண்டல ஆசிரமம் நிறுவ, இன்னும் பல மைல் கற்கள் கடக்கவேண்டும். நாமெல்லோரும், உள்ளூர் அப்யாசிகளை, இப்பணியில் வெற்றி பெற வாழ்த்துவோம்.

**To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org**
© 2009 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. "Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.